www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**10 R** Register No. [ ]

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு–2024

நேரம் : 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 50

## பிரிவு - I

**I. பலவுள் தெரிக 6x1=6**

1. தமிழினத்தை ஒன்று படுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ............
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
2. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப்போரிடுவதன் காரணம் ..........
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
3. ஏர் புதிதா? எனும் கவிதையின் ஆசிரியர் ............
   அ) கு.ப.ராஜகோபாலன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சுரதா
4. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்றவர் ............
   அ) நல்லந்துவனார் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) பெருங்கடுக்கோ
5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .........
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா
6. மேன்மை தரும் அறம் என்பது ............
   அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
   ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது
   ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது.

## பிரிவு - II

**II. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க 3x2=6**

7. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
8. குறிப்பு வரைக - அவையம்
9. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?
10. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
11. பொன் ஏர் பூட்டுதல் என்பது யாது?

## பிரிவு - III

**III. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க 3x2=6**

12. புறத்திணைகளில் எதிரெதிர்த்திணைகளை அட்டவணைப்படுத்துக
13. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக
14. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ) தலைமுறைக்கு ஒருமுறை மட்டும் மலர்வது மூங்கில்.
    ஆ) தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.
15. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக:
    அ) கோயம்புத்தூர் ஆ) புதுச் சேரி
16. கலைச்சொல் அறிவோம்: அ) Irrigation ஆ) Belief



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

## பிரிவு - IV

**IV. எவை யேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க. (21-வது வினா கட்டாய வினா) 3x3=9**

17. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
18. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
19. "முதல் மழை விழுந்ததும்" என்ன வெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா கவிபாடுகிறார்?
20. வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை-இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.
21. "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகார மனனப் பாடல்.

## பிரிவு - V

**V. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 3x5=15**

22. மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.
23. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்று உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.
24. எண் 25, நேரு தெரு, உக்கடம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் வசிக்கும் சேகர் என்பவரின் மகன் செழியன் பத்தாம் வகுப்பு முடித்துள்ளார். உக்கடம் மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்பு சேருவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.
25. நம் பழம் பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள் கோவில்களிலும், பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.
26. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



## பிரிவு - V

**VI. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி 1x8=8**

27. நாட்டு விழாக்கள். விடுதலைப் போராட்ட வரலாறு நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளை ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக. (அல்லது)
28. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக. மாணவன் - கொக்கைப் போல, கோழியைப் போல- உப்பைப் போல - இருக்க வேண்டும் - கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் - குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி-கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் - ஆசிரியர் விளக்கம். மாணவன் மகிழ்ச்சி.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com